# 2022ஆம் ஆண்டின் அதி உயர் பாதுகாப்பு வலயக் கட்டளை இல.1 தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கை

25ஆம் திகதி, செப்டெம்பர் 2022, (கொழும்பு): 2022ஆம் ஆண்டின் அதி உயர் பாதுகாப்பு வலயக் கட்டளை இல.1 இனை உள்ளடக்கியதாய், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி குறித்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) கடும் கரிசனை கொள்கின்றது. இந்தக் கட்டளைகள்/ கட்டுப்பாடுகள் கொழும்பு மாவட்டத்தினுள் பல பிரதேசங்களை "உயர் பாதுகாப்பு வலயங்களாக" விபரிக்கின்றதுடன் அந்தப் பிரதேசங்களினுள் நடவடிக்கைகளுக்கு கடுமையான கட்டுப்பாடுகளை ஓர் அரசாங்கம் விதிப்பதற்கும் தண்டங்கள் மற்றும் கடுமையான பிணை நிபந்தனைகளுக்கும் ஏற்பாடளிக்கின்றன.

இந்தக் கட்டளைகள்/ கட்டுப்பாடுகள் 1955ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க அரச இரகசியக் சட்டக் கோவையின் கீழ் மேற்கொள்ளப்பட்டவையாகக் கருதப்படுகின்றது. இந்தக் கட்டுப்பாடுகள் சட்டத்தின் விடயப் பரப்பிற்குள் உட்பட்டவையாக இல்லையென்பதை சட்டத்தின் ஒரு கூர்மையான பரிசீலனை காண்பிக்கின்றதுடன், அதன் முதன்மைக் குறிக்கோள் நாட்டின் பாதுகாப்புக்கான இரகசியத் தகவல்களைப் பாதுகாப்பதாக உள்ளது. முதலில், இந்தக் கட்டளைகள்/ கட்டுப்பாடுகளின் பொருள் மற்றும் அவற்றின் நோக்கம் என்பன தெளிவாகவே சட்ட விரோதமானவை மற்றும் அரசியலமைப்பினால் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளிற்கு முரணானவை என்பதை மா.கொ.நி கவனத்தில் கொள்கிறது. மேலும், அரச இரகசிய சட்டக் கோவையின் கீழ் அறிவிக்கப்பட்ட கட்டுப்பாடுகளினால் இந்த அடிப்படை உரிமைகள் வெறுமனே கட்டுப்படுத்தப்பட முடியாதவையாகும்.

மாற்றுக் கருத்துக்களை அடக்கியொடுக்கி மற்றும் நாட்டினுள் அச்சம் நிறைந்த ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு, ஐக்கிய தேசியக் கட்சி [ஐ.தே.க] - இலங்கை பொதுஜனப் பெரமுனக் கட்சி [இ.பொ.பெ.க] என்பவற்றின் அரசாங்கத்தினால் அரசியலமைப்பபின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை எதேச்சாதிகாரமான வகையில் மட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் ஒரு தொடரான முயற்சிகளில் தற்போதையதொன்றாக அரச இரகசியச் சட்டக் கோவையின் இந்தத் தெளிவான துஷ்பிரயோகம் உள்ளது. அனைத்து வித மாற்றுக் கருத்துக்களையும் திறனற்றதாக்குவதற்கு ஐ.தே.க - இ.பொ.பெ.க அரசாங்கத்தினால் பொதுப் பாதுகாப்புச் சட்டங்கள் உபயோகிக்கப்படுவதிற்கு, இந்தக் கட்டளைகள்/ கட்டுப்பாடுகள் மற்றொரு உதாரணமாக அமைகின்றது. மாற்றுக் கருத்துக்களை நசுக்கும் இந்தத் தற்போதைய முயற்சி, அரசியல் மற்றும் ஆட்சிமுறையில் ஒரு மாற்றத்தைக் கோரி மாதங்கள் நீடித்த, மக்கள் ஒன்றுகூடிய போராட்டத்தின் பின்னணிக்கு எதிரானதாகும் என்பதுடன் அரசாங்கம் மீதான நம்பிக்கையை அது மேலும் சிதைக்கின்றது.

முன்னொருபோதும் இருந்திராத ஒரு பொருளாதார நெருக்கடியை இலங்கை முகங்கொடுக்கின்றதுடன் இலங்கையின் பொருளாதாரச் சரிவைச் சீர்செய்வதற்கும் மற்றும் பல இலட்சக் கணக்கான இலங்கை மக்களின் வீழ்ச்சியுறும் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்த உதவுதற்குமான வாக்குறுதிகளை, ஜனாதிபதி விக்கிரமசிங்க திரும்பத் திரும்ப அளித்துள்ளார்.

அவ்வாறான ஓர் அசாதாராண தருணம், மக்களது உரிமைகள் மற்றும் சட்டத்தினாட்சி என்பவற்றை நிலைநிறுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சி மற்றும் அரசியலமைப்புக் கட்டமைப்பைப் பின்பற்றுவதில் ஸ்திரத்தன்மைக்கும் உதவுதல் என்பவற்றின் மூலம் குடிமக்களின் தேவைகளைக் கவனத்தில் கொள்கின்ற ஒரு அரசாங்கத்தைத் தேவைப்படுகின்றது. தங்களது அடிப்படை உரிமைகளை அப்பியாசிக்கும் குடிமக்களை இலக்காகக் கொள்வதற்கு பொதுப் பாதுகாப்புச் சட்டங்களின் இந்தக் கையாளுதல் அரசாங்கம் மற்றும் சட்ட முறைமை என்பவற்றின் மீது மக்களின் நம்பிக்கையைச் சிதைப்பது மட்டுமன்றி பொருளாதாரத்தின் முக்கிய துறைகளின் செயற்படுதல்களையும் பாதித்து மேலும் ஸ்திரத்தன்மையின்மை மற்றும் நிச்சயமற்றநிலை என்பவற்றுக்குப் பங்களிக்கின்றது. அவ்வாறான ஒரு பின்னணியில், இந்தச் சட்டவிரோத கட்டளைகள்/ கட்டுப்பாடுகளை உடனடியாக இரத்துச் செய்வதற்கும், மற்றும் மாற்றுக் கருத்துக்களின் தொடர்ச்சியான அடக்கியொடுக்குதலை நிறுத்துவதற்கும் ஜனாதிபதியிடம் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கோருகிறது.

அரச இரகசிய சட்டக் கோவை மற்றும் அதி உயர் பாதுகாப்பு வலயக் கட்டளை இல.1 உள்ளடக்கியுள்ள கட்டுப்பாடுகள் என்பவற்றின் ஒரு கூடுதல் விபரமான பரிசீலனை, இங்கே தரப்பட்டுள்ளது.